# Kamban's Portrayal of the Character Angada

**K. Rukkumani Rajathi**
*Ph.D., Research Scholar (Part Time), P.G. & Research Department of Tamil*
*Arignar Anna Government Arts College, Cheyyar*

**Dr. K. Venkatesan**
*Associate Professor, P.G. & Research Department of Tamil*
*Arignar Anna Government Arts College, Cheyyar*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18981507

**Abstract**
*The epic of Kamban is a majestic epic palace like the Himalayas. Many characters were seen in it. It is a study of the characteristics of Angada, the son of Vali.*
***Keywords:*** *Rama, Vaali, Angadan, Ravana*

**References**

1. So. Murugappa, Rama Katha, Pari Nilayam 59, Broadway, Chennai – 1.
2. Sirkazhi Arunachalakavirayar, Rama Natak Kirthanai, Chennai.
3. Kodaikanal Gandhi, Nakkheeran in the Ramayana, West Circular Road, Manthalai, Chennai – 600 028.
4. Rajaram, Some verses in the Kamba Ramayana, Mullai Nilayam, 9, Bharathi Nagar, First Street, T. Nagar, Chennai – 600 017.
5. Mahakavi A.K.Adithar, Kambar 1000, Tamil Development Council, 9, Manikeswari Road, Lower Pudupattam, Chennai – 600 010.
6. Siva.Kanniyappa, Collection of Solo Songs, 43, Pudupattaru Mannadi, Chennai – 600 001.
7. Puliyurg Keshikan, Kambar Solo Songs, Pari Nilayam, 184, Broadway, Chennai – 600 108.
8. M.Chandrasekhar, Thirukkural, 90, Sundaravel Street, Parasakthi Colony, Sivakasi – 626 123.
9. Poet Muthamizh Choti Su. Arunachalam, Kamban Kalanjiyam, VOC Library, G – 1, Rayapettai, Chennai – 600 014.
10. Rajaji, Ramayana, 8th Edition, Chakravarthy Rajagopalachari, Sethupattu.
11. M. Vasu, The Character Creation of Kaikeyi in Kambaramayanam, Dr. Olivanan, Assistant Professor, Tamil Department, A.A.A. College of Arts, Cheyyar – 604 407.
12. M. Ramasamy, Kambanum Sadayanam, Rasipuram – 637 408.
13. A.S. Gnanasambandhan, Kambaramayanam Ramavatharam, Yuddhakandam – 1, Chief Editor, Kamban Aranila.

# கம்பனின் அங்கதன் பாத்திரப் படைப்பு

***கா. ருக்குமணி ராஜாத்தி***
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, செய்யாறு
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

***முனைவர் க. வெங்கடேசன்***
இணைப் பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, செய்யாறு
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

***ஆய்வுச் சுருக்கம்***
*கம்பனுடைய காவியம் இமயமலைப் போன்ற ஒரு கம்பீரமான காவிய மாளிகை. இதில் எத்தனையோ பாத்திரங்கள் அழகுறக் காணப்பட்டன. வாலியின் மகன் அங்கதனின் பண்புகளைக் கூறும் ஆய்வாகும்.*
***திறவுச் சொற்கள்:*** *இராமன், வாலி, அங்கதன், இராவணன்*

தமிழ் இலக்கிய வரலாற்றில் கம்பராமாயணம் எல்லோர் உள்ளத்திலும் அமர காவியமாக வாழ்ந்துக் கொண்டிருக்கிறது. இதனை,

**பத்தாயிரம் கவிதை முத்தாக எழுதி வைத்த**
**சத்தான கம்பனுக்கு ஈடு இன்னும்**
**வித்தாகவில்லை என்று பாடு**

என்று கண்ணதாசன் அவர்களும்,

**தமிழ் என்னும் கடலுக்குள் தரை வரைக்கும்**
**போனவனே**

என வைரமுத்து அவர்களும் புகழாராம் சூட்டுகின்றனர்.

கம்பரை வடமொழி, தென்மொழி காப்பியங்களாக பொருண்மையில் தம் சித்திரக்கோலைத் தோய்த்துத் தம் காப்பிய ஓவியத்தைக் கம்பநாடன் வரைந்ததாக மு.ராகவையங்கார் குறிப்பிடுகிறார்.

கம்பராமாயணம் இலியட் ஓடிசி, மகாபாரதம் முதலானவற்றை வெல்லும் சிறப்புடையது என்பது மட்டுமின்றி தனக்கு முதல் நூலான வால்மீகி இராமாயணத்தையே விஞ்சும் சுவையுடைய காப்பியமாகும் என்று வ.வே.சு., ஐயர் குறிப்பிடுகிறார். மேலும் உலகத்திலேயே வேறொரு நாட்டில் இவ்வளவு பழமையான கவிஞன் இருபதாம் நூற்றாண்டு மக்களுடைய மனதை இப்படி ஆட்கொண்டதில்லை எனக் கூறுகிறார் எஸ்.மகாராஜன்.

இராமகாதையில் ஈடில்லாச் சிறப்புக்குக் காரணம் படைத்த கம்பனின் மேன்மையும் பாட்டுடைத்தலைவனாகிய நடையில் நின்னுயர் நாயகன் இராமபிரான் மேன்மையும் ஆகும். இக்காவியத்தின் வாயிலாக கம்பன் உணர்த்தும் அறங்கள் பற்பல. கற்பின் வன்மையும் தீமையின் அழிவையும் தியாகத்தின் உயர்வையும் நட்பின் சிறப்பையும் பல நிலைகளில் விளக்குவது கம்பனின் இராமகாதை.

கம்பராமாயணத்தில் காட்டும் முக்கிய பாத்திரங்களில் முதன்மையானதும் முக்கியமானதும் அங்கதன் தூது என்று பாத்திரத்தின் பண்பு நலன்களும் அவனின் தனிப்பட்ட செயல்களை உறுதி செய்யும் வகையிலும் அவனின் தூது திறத்தை வெளிப்படுத்தும் வகையில் இவ்வாய்வு அமைந்துள்ளது.

தாரை, வாலியின் மகன் அங்கதன் பல உயர்ந்த நற்குணங்களைப் பெற்றவள். கம்பராமாயணத்தில்

இராமபிரானுக்காக இராவணனிடம் அங்கதன் தூதுவனாக அனுப்பப்பட்டான் என்று கம்பர் குறிப்பிடுகின்றார். வாலி உயிர்போகும் நேரத்தில் இராமபிரானிடம் இனி, எனது மகன் உன் அடைக்கலப் பொருள் என்று அவர் கையில் ஒப்படைத்துவிட்டு உயிர் துறந்தான். உடனே இராமன் உடைவாளை நீட்டி இதை நீ ஏற்றுக்கொள் என்றார்.

***அரியனை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏத்தப்***
***பரதன் வெண்குடை கவிக்க இருவரும் கவரிவிலு***
***விரைசெறி குழலி லுங்க பெண்ணெயூர் சடையன் தங்கள்***
***மரபுளோர் கொடுக்க வாங்கி விசிட்டேன் பனைந்தான் என்ப***

இப்பாடல் மூலம் கம்பர் அங்கதன் உடைவாள் ஏந்தினான் என்று குறிப்பிடுகின்றார்.

இராமன், இலட்சுமணன், விபீடணன், சுக்கிரீவன், அனுமன், அங்கதன் மற்றும் வானர வீரர்கள் அனைவரும் ஒன்று திரண்டு இராவணன் போருக்கு வருவான் என்று வாயிலை முற்றுகையிட்டுக் காத்து நின்றனர். அப்போது இராமபிரான் மனதில் ஒரு யோசனை தோன்றியது. இராவணன் இடம் இறுதியாகச் சீதையை விட்டு விடுமாறு சொல்லிவிட்டு வர ஒரு தூதுவனை அனுப்பலாம் என்று கூறினார். விபீடனும் சுக்கிரீவனும் அரசருக்கே உரிய செயல் என்றார்கள். ஆனால், இலட்சுமணனோ நாம் பகைவர் இடம் இரக்கம் கூடாது. அவனிடம் போர் புரிய வேண்டுமே தவிர சமாதானம் பேசுவது தவறாகும் என்று இராமபிரானிடம் கூறினான்.

### இராவணனிடம் அங்கதன் சொல்ல வேண்டுபவை

இராமர் அங்கதனை அழைத்து நான் சொல்வதைப் பகைவர் இடத்தில் சொல்லி விட்டு திரும்பி வருவாயாக.

***என்னவற்று உரைப்பது என்ன ஏந்திழை யானை விட்டுத்***
***தன்னுயிர் பெறுகை நன்றோ? அன்றெனில் தலைகள் பத்தும்***
***சின்னபின் னங்கள் செய்யச் செருக்களம் சேர்த்தல் நன்றோ?***
***சொன்னது இரண்டின் ஒன்றே துணிகெனச் சொல்லிடு என்றான்***

***(யுத்தகாண்டம், அங்கதன், 6984)***

### அங்கதன் இராவணனைக் காணுதல்

அங்கதனை இராவணனின் சுற்றத்தார்கள் கண்டனர். பின் அனைவரும் அவனைப் பார்த்து முன்பு இலங்கையில் வந்து அமர்களப்படுத்திய அனுமன் தானோ என்று அனைவரும் பயந்தனர். உடல் நடுங்கி இராவணனை சுற்றிக் கொண்டனர். பின், அவனைப் பற்றி அனைத்து அமைச்சர்கள் பேசிக் கொண்டதை இருபது காது வழியாக கேட்டுக் கொண்டிருந்தான். அவனது இருபது கண்களும் போருக்குப் புறப்படுகின்ற சேனையைப் பார்த்துக் கொண்டிருந்தது. அப்போது அங்கு வந்த அங்கதனைப் பார்த்தான் இராவணன்.

### இராவணனது ஆற்றலை அங்கதன் வியத்தல்

மேலும் அங்கதன் இராவணனைப் பார்த்ததை கம்பர் பாடல் மூலம் குறிப்பிடுகின்றார்.

***கல்லுண்டு மரமுண்டு ஏழைக் கடலொன்றும் கடந்தேம் என்னும்***
***சொல்லுண்டே இவனை வெல்லத் தோற்றத்தோர் கூற்றம் உண்டோ?***
***எல்லுண்ட படையைக் கொண்டால் எதிருண்டே? இராமன் கையில்***
***வில்லுண்டேல் உண்டெ என்று எண்ணி ஆற்றலை வியந்து நின்றான்***
***கல்லையும் மரங்களையும் கொண்டு கடலைத் தூர்த்து விட்டோம்***

எனக் கர்வம் கொள்ளக்கூடாது. அதனால் இந்த இராவணனை எதிர்த்து நிற்பது அரியமுடியாத காரியம். இவன் கையில் ஒளி பொருந்திய ஆயுதத்தைக் கொண்டுள்ளான். இவனை எதிர்க்க இராமபிரானினால் மட்டுமே முடியும். அவரைத் தவிர வேறு யாராலும் இவனைக் கொள்ள முடியாது என்ற அவர் பெருமையைக் கூறி வியந்தான். என் தந்தையான வாலியை ஓர் அம்பினால் கொன்றவர். மற்றவர்கள் தம்முயிரின் நன்மையை நாடுகின்றவர்கள் இவனை எதிர்த்து சிறிதளவும் துன்பம் விளைவிக்க முடியாது. ஆனால், தம்முயிருக்குக் கேட்டினை விளைவித்துக் கொள்பவர்கள் தான் இவனை எதிர்க்க முடியும்.

**“எதிர்த்த போரில் வென்ற தாதை”**

என்பதில் அடங்கியுள்ள வரலாறு அனைத்து விண்ணுலகையும்மண்ணுலகையும்வெற்றிகொண்ட இராவனேசுவரன் தனது வெற்றிக் கொடியை நாட்டி வந்தான். ஒருமுறை சிவநெறி செல்வன் வாலியை வெல்ல வேண்டும் என்று கிஷ்கிந்தா நகரம் வந்தான். அங்கு வாலி இல்லை. அவன் நாள்தோறும் நீராடி நித்திய கருமம் முடிக்க சென்றிருந்தான். இதனை அறிந்த இராவணன் தென் கடற்கரையில் சிவபூசை செய்து கொண்டிருந்த வாலியைக் கண்டான்.

அவனை வெல்ல வேண்டும் என்று அடி ஓசைப்படாமல் மெல்ல நடந்து அவன் பின்னே சென்றான். வாலி அவன் வருவதைக் கீழ்கண்ணால் பார்த்துவிட்டான். உடனே இராவணன் தன்னைக் கட்ட தொடங்கிய உடன் இராவணனை தன் கக்கத்தில் இடுக்கி வாலினால் சுற்றிக் கொண்டான். அவனைத் தூக்கி எட்டு திசைகளும் சுற்றி காற்றை விட வேகமாகச் சென்று மலைகளையும் கடலையும் தாண்டி கிஷ்கிந்தை வந்து அவனை அவிழ்த்து கீழே தள்ளினான். வாலியின் வீரத்தைப் புரிந்து கொண்டு தன்னைப் பற்றி கூறி வாலியிடம் யாகம் செய்து நட்பு வளர்த்துக் கொண்டான் என்று கம்பர் குறிப்பிடுகின்றார்.

## இராவணனது மகுட மணியைத் தன் சிறிய தந்தை பறித்தமை

அணிகலன்கள் இல்லாமல் சீதாப்பிராட்டியின் மீது ஆசை வைத்து இருக்கும் இராவணனை அழிக்க பலர் இருக்கின்றார்கள். பிளவுபட்ட வாயையுடைய நாகத்தைக் கவர்ந்து கொண்டு சென்ற பெருமையைக் கொண்ட கருடனைப் போல் இராவணனின் மகுடத்தில் இருந்த மணிகளைப் பறித்து வந்த என் சிறிய தந்தை சுக்கிரீவன் எல்லாரைக் காட்டிலும் வலிமையுள்ளவர் ஆவார் என மேலும் எண்ணினான் அங்கதன்.

## அங்கதன் இராவணனிடம் தான் யார்? எனக் கூறுதல்

வாலியின் மகன் நான் என்று இராவணனுக்குத் தெரிவித்தான் என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

**“இந்திரன் செம்மல் பண்டோர் இராவணன் என்கின்றானைச்**
**சுந்தரத் தோள்க ளோடும் வாலிடைத் தூங்கச் சுற்றிச்**
**சிந்தூரக் கிரிகள் தாவித் திரிந்தனன் தேவர் உண்ண**
**மந்தரம் பொருப்பால் வேலை கலக்கினான் மைந்தன் என்றான்”**

அதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தான் இராவணன். வாலி எனது உயிர் நண்பன் ஆவான். அதனால் அங்கதனைத் தன் வசப்படுத்திக் கொள்ள எண்ணினான். நானும் உன் தந்தையும் அக்கினி சாட்சியாய் நட்பு கொண்டோம். அவனுடைய மகனாக இருந்துக்கொண்டு ஒரு மனிதனுக்குத் தூதுவனாகலாமோ? இது உனக்குப் பெரும் பழியைத் தரும். அதனால் இச்செயலை விட்டு விடு. நீ போர் மூள்வதற்கு முன் இங்கு வந்தாய்.

அதனால் தூதுவனாக வந்ததும் ஒரு நன்மை ஆயிற்று. நான் உனக்கு வானரங்களுக்குத் தலைவனாக இருக்கும் பதவியைத் தருகிறேன். இதை ஏற்று பெருமையுடன் விளங்குவாய். நான் தரும் இப்பதவியை ஏற்றால், நான் சீதையைப் பெற்றிருப்பதன்றி உன்னையும் பெற்றவனாவேன். இதனால் எனக்கு எதுவும் கைக்கூடும். நீ யாருடைய தூதுவன் என்கின்றாயோ? அவனே உனது தந்தையைக் கொன்றவன். தந்தையைக் கொன்றவனைப் பகைவனாகக் கொள்வது முறை ஆகும். அதைவிட்டு முகம் கவிழ்ந்து பணியாளாய் இருப்பது முறை இல்லை. உலகமே உன்னை பழிப்பதற்கு இடம் ஆகும். அவனை விட்டு விட்டால் உன்னைக் கெட்டவன் என்று கூற மாட்டார்கள். அவர்கள் இன்றைக்கே இறந்து போவார்கள். அதற்கு எந்த சந்தேகமும் இல்லை. அதனால் நான் உனக்கு இன்றைக்கே பதவி வழங்குகிறேன். நீ சிம்மாசனத்தில் அமர்ந்து தேவர்கள் துதிக்க நன்கு ஆட்சி செய்வாயாக!

## இராவணன் கூறியதை ஏற்காத அங்கதன்

இராவணன் கூறியதைக் கேட்ட அங்கதன் வலிய தோள்களும் மார்புகளும் இலங்கை நகரமே அசையும்படி சிரித்தான் என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

**வாய்தரத் தக்க சொல்லி என்னையுன் வசம்செய் வாயேல்**

**ஆய்தரத் தக்க தன்றோ தூதுவந்து அரசது ஆள்கை**
**நீதரக் கொள்வேன் யானே இதற்குஇனி நிகர்வேறு எண்ணில்**
**நாய்தரக் கொள்ளும் சியம் நல்லரசு என்று நக்கான்**

இலங்கை நகரில் மரணம் வரப்போகிறது என்று தெரிந்து உன் தம்பியான வீடணன், எங்களை வந்து சேர்ந்தான். இதைக் கண்டு நீ பிதற்றுகின்றாயோ? தூதுவனாக வந்த நான், உனது ஆசைக்கு வேறுபட்டேனானால் பெரியோர்கள் கூறும் பாவமும் பழியும் வந்து சேரும்? மேலும் நான் உன்னிடத்தில் அரசைப் பெற்றுக் கொள்வது நாயிடமிருந்து சிங்கம் அரசைப் பெற்றுக்கொள்வதற்கு சமம் ஆகும் என்று சொல்லி சிரித்தான் என்று கம்பர் கூறுகின்றார்.

அங்கதன் வார்த்தையைக் கேட்ட இராவணன், இவனைக் கொன்றே தீர்வேன் என்று கோபம் கொண்டு எழுந்தான். அந்தோ! இந்தக் குரங்கைக் கொள்ளுவதற்கு ஆயுதத்தை எடுத்தேன். ஆனால், பெரும் வீரனான எனக்கு இழுக்கு ஆகும் அல்லவா! என்று எண்ணினேன்.

இறக்கப்போகின்ற இராமலட்சுமனரை எண்ணி இங்கு வந்த காரியத்தைச் சொல் என்று கேட்டான். நீ இராமன் இடத்தில் பல தீங்குகளைச் செய்துள்ளாய். ஆனாலும் அவர் உன்னிடத்தில் கருணை நீங்காது இருக்கின்றார். அப்பெருமான் இன்று என்னை அழைத்து, போர் புரிவதற்கு அச்சம் கொண்டிருக்கின்ற இராவணனைப் பார்த்து சீதையை விட்டுவிடு! இல்லையென்றால் எம்மோடு போர் புரிந்து உயிரை விட்டுவிடு! என்று சொல்வாய் என்று சொன்னார்.

அங்கதன் இராவணனிடம் உள்ள தவறுகளை எல்லாம் இராமபிரான் கூறியதனைச் சொல்லி விட்டு, அடர்ந்த கூந்தலை உடைய சீதாபிராட்டியை இராமன் இடத்தில் விடு, அவரை வணங்கி வாழ்வு பெறுவாய்! சுற்றத்தாரோடு இறந்து போவேன் என்று முடிவு செய்தார். என் பின்னே இந்த அரண்மனை வாயிலை விட்டு வெளியே போருக்குப் புறப்பட்டு வருவாய்! வீணாக கோழைபோல பதுங்கியிருக்காதே! உனக்கு இதைவிட இழுக்கு வேறு உண்டோ? என்றான்.

அங்கதன் வார்த்தைகளில் கோபமுற்ற இராவணன் தரையில் மோதி அடியுங்கள் இவனை என்று நால்வரைக் கட்டளையிட்டால் மறுகணம் நால்வரைத் தூக்கிக்கொண்டு கோபுர வாயிலில் நின்று தலைகளை முறித்து, கீழே எறிந்து காலால் மிதித்து கூழாகத் தேய்த்தான். அனைவரையும் பார்த்து இராமபிரானின் சேனைப் படைகள் வந்து தாக்கும் முன் இராவணனை விட்டு ஓடி விடுங்கள் என்று எச்சரிக்கை விடுத்து விட்டு இராமபிரானிடம் வந்து சேர்ந்தான்.

## முடிவுரை

"கம்பனின் அங்கதன் பாத்திரப் படைப்பு" என்னும் தலைப்பிலான இவ்வாய்விற்குப் பல அரிதான நூல்களைத் தேடிக் கண்டு ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கிரேக்க நாட்டில் தோன்றிய இலியட், ஒடிசி போன்ற நூல்களைக் காட்டிலும் சிறந்த நூலாகக் கம்பராமாயணம் இருந்து வருகிறது. வால்மீகி இராமாயணத்தைக் காட்டிலும் கம்பராமாயணம் சிறந்து விளங்குவதைக் காணலாம்.

வாலி குரங்கினத்தைச் சார்ந்தவனாக இருப்பினும், அவனிடத்தில் உள்ள சிந்தனைகளைக் கம்பர் வெளிப்படுத்துகிறார். தவறு செய்த பின், கடவுளாக இருப்பினும் அதைத் தட்டிக் கேட்கும் உரிமை எல்லோருக்கும் வேண்டும் என்பதை வாலியினுடைய கதாப்பாத்திரமாகத் திகழ்கிறது. வாலி அசுரகுணம் படைத்தவனாக இருப்பினும் யாரால் தனக்குத் துன்பம் நேர்ந்ததோ, அந்த தம்பி சுக்கிரீவன் தவறு செய்தால் இராமபிரான் அவன் மீது அம்பு எய்த வேண்டாம் என்று சகோதரப் பாசமும் வெளிப்படுகிறது.

அவன் சூழ்ச்சி இராமனாக வாலியுடன் நேருக்கு நேராகப் போர் புரியாமல் மறைந்திருந்து கொன்ற போதும், அடுத்தவன் மனைவி மீது ஆசைப்படுவது தவறு என்று உணர்ந்த வாலி மனம் மாறி இராமனுடைய திருவடிகளை வீழ்ந்து வணங்கினான்.

தூது பற்றி பல இலக்கியம் பேசப் பட்டிருந்தாலும் கம்பராமாயணத்தில் அங்கதனுக்கென்று தனி இடமாகப் பேசப்பட்டு வருகிறது. இலக்கியத்தில் அன்னம், கிளி, நாரை போன்றவை தூது சென்றாலும்

கம்பராமாயணத்தில் அங்கதனையே தூதிற்கு ஒரு எடுத்துக்காட்டாகக் கூறப்படுகின்றது என்பது இவ்வாய்வின் முடிவு ஆகும்.

## துணைநூற்பட்டியல்


1. சொ.முருகப்பா, இராமகாதை, பாரி நிலையம் 59, பிராட்வே, சென்னை - 1.
2. சீர்காழி அருணாசலக்கவிராயர், இராம நாடகக் கீர்த்தனை, சென்னை.
3. கொடைக்கானல் காந்தி, இராமாயணத்தில் நக்கீரன், மேற்கு வட்டச் சாலை, மந்த வெளிப்பாக்கம், சென்னை.
4. இராசாராம், கம்ப இராமாயணத்தில் சில படலங்கள், முல்லை நிலையம், 9, பாரதி நகர், முதல் தெரு, தி.நகர், சென்னை.
5. மகாகவி அ.கு.ஆதித்தர், கம்பர் 1000, தமிழ் வளர்ச்சி மன்றம், 9, மாணிக்கேசுவரி சாலை, கீழ் புதுப்பாக்கம், சென்னை.
6. சிவ.கன்னியப்பா, தனிப்பாடல் திரட்டு, 43, புதுத்தெரு மண்ணடி, சென்னை.
7. புலியூர்க் கேசிகன், கம்பன் தனிப்பாடல்கள், பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை.
8. ம.சந்திரசேகர், திருக்குறள், 90, சுந்தரவேல் தெரு, பராசக்தி காலனி, சிவகாசி.
9. கவிஞர் முத்தமிழ் விரும்பி சு.அருணாசலம், கம்பன் களஞ்சியம், வ.உ.சி.நூலகம், ஜி - 1, இராயப்பேட்டை, சென்னை.
10. ராஜாஜி, ராமாயணம், எட்டாம் பதிப்பகம், சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி, சேத்துப்பட்டு.
11. மு.வாசு, கம்பராமாயணத்தில் கைகேயி பாத்திரப் படைப்பு, முனைவர் ஒளிவாணன், உதவிப்பேராசிரியர், தமிழ்த் துறை, அ.அ.அ.கலைக்கல்லூரி, செய்யாறு.
12. புலவர் மு.இராமசாமி, கம்பனும் சடையனம், இராசிபுரம்.
13. அ.ச. ஞானசம்பந்தன், கம்பராமாயணம் இராமாவதாரம், யுத்தகாண்டம் - 1, முதன்மைப் பதிப்பாசிரியர், கம்பன் அறநிலை.